1. நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீ.எல்.சீ. - பீ.கியு 118 இல் (இதன் பின்னர் "வங்கி" என்றழைக்கப்படும்) திறந்து பராமரிக்கப்பட்டு வருகின்ற அனைத்து மணி மார்கெட் சேமிப்புக் கணக்குகளும் பின்வரும் நியதி மற்றும் நிபந்தனைகளால் கட்டுப்படுத்தப்படும்:
2. வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஆளடையாளத்தை உறுதிப்படுத்துகின்ற இரண்டு ஆவணங்களின் அடிப்படையில் (தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச் சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம்) மற்றும் முகவரியை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணம் ஒன்றின் (சமீபத்தில் வழங்கப்பட்ட நீர்/மின் கட்டண பில், வங்கி கணக்குக் கூற்று) அடிப்படையிலும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு ஆளுக்கு / ஆட்களுக்கு கணக்கைத் திறக்க முடியும்.
3. மணி மார்கெட் சேமிப்புக் கணக்கு ஒன்றைப் பின்வரும் ஆட்களுக்குத் திறக்க அனுமதியுண்டு:

   (அ) ஒரு தனி நபருக்கு, அவரின் பெயரில்

   (ஆ) ஆணையில் (mandate) பணம் மீளப் பெறும் அதிகாரம் பற்றி தெளிவான அறிவுறுத்தல்கள் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு இணங்க இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால் அவர்களின் பெயரில்

   (இ) வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட ஒரு கம்பனியால், சங்கத்தால், கழகத்தால், அல்லது அதனை ஒத்த ஒரு நிறுவனத்தால் அதன் பெயரில்

   (ஈ) வங்கியினால் அங்கீகரிக்கப்படக் கூடிய ஒரு நிறுவனத்தால்

4. ஒவ்வொரு கணக்கிற்கும் ஓர் கணக்கிலக்கம் வழங்கப்படும் என்பதுடன், வங்கியுடன் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் அந்த இலக்கத்தைக் குறிப்பிட வேண்டும். கணக்கு வைத்திருப்பவருக்கு அறிவித்தல் கொடுத்து விட்டு மேற்படி இலக்கத்தை மாற்றுவதற்குக் வங்கிக்கு ௗ உரிமை உண்டு. கணக்குக் கூற்று வழங்கப்படுகின்ற ஒரு சேமிப்புக் கணக்காக மாத்திரமே கணக்கைத் திறக்கலாம். மேற்படி கணக்குக் கூற்றுகளின் பிரதிகளை வழங்குவதற்கு வெளியிடப்பட்டுள்ள வங்கியின் நியம கட்டணங்களின் படி ஒரு கட்டணத்தை அறவிடும் உரிமை வங்கிக்கு ௗ உண்டு.
5. ஒரு கணக்கைத் திறக்க முடியுமான அடிப்படை குறைந்த பட்ச வைப்புத் தொகை ஒரு மில்லியன் (ரூ. 1,000,000/-) அல்லது வங்கியினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்ற வேறொரு தொகையாக இருக்கும்.

6. கணக்கின் நிலுவைத் தொகை ஒரு மில்லியனை (ரூ. 1,000,000/-) விடவும் குறைந்தால் அந்த மீதிக்காக வட்டி செலுத்தப்பட மாட்டாது. ஒரு மில்லியனுக்கும் (ரூ. 1,000,000/-) கூடிய நிலுவைத் தொகை பராமரிக்கப்பட்டு வந்தால் மாத்திரமே வட்டி செலுத்தப்படும்.
7. கணக்கில் பராமரிக்கப்பட்டு வருகின்ற நாளாந்த நிலுவையின் அடிப்படையில் வட்டி கணிக்கப்பட்டு அது மாதாந்தம் செலுத்தப்படும்.
8. கணக்கில் குறைந்த பட்ச நிலுவை பராமரிக்கப்பட்டு வருகின்றதை அடிப்படையாக வைத்து கணக்கை தடுக்க முடியாது.
9. வங்கிக்கு தனது விருப்புரிமைக்கு இணங்க இந்தக் கணக்கிற்கான வட்டி விகிதத்தை, தளங்களை (slabs), விசேட இலட்சணங்களை மேம்படுத்துவதற்கு, அதிகரிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு உரிமை உண்டு.
10. வட்டி விகித திருத்தங்கள் பற்றிய அறிவிப்பானது, கடிதம் மூலமாகவோ அல்லது உள்நாட்டு நாளிதழ்களில் பிரசுரிப்பதன் மூலம் மற்றும்/அல்லது வங்கிக் கிளைகளிலுள்ள அறிவித்தல் பலகைகளில் காட்சிப்படுத்துவதன் மூலம் மற்றும்/அல்லது கணக்குக் கூற்று அறிவித்தல்கள் அல்லது டிஜிட்டல் மார்க்கமாக கொடுக்கப்படுகின்ற ஏனைய அறிவித்தல்கள் ஆகியன வாடிக்கையாளருக்கு போதியளவில் வழங்கப்பட்டுள்ள அறிவித்தல்களாகக் கருதப்படுவதுடன் வாடிக்கையாளர்கள் அந்த அறிவித்தல்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
11. சட்டத்தின் பிரகாரம், அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அல்லது மத்திய வங்கியின் அறிவுறுத்தலின் படி திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை ஏற்பட்டால் மேற்படி நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தானாகவே திருத்தத்திற்கு உட்படும்.
12. வாடிக்கையாளரால் கணக்கு மூடப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அவ்வாறு மூடப்படுகின்ற ஒவ்வொரு கணக்கிற்காகவும் கையாளும் கட்டணம் ஒன்று அறவிடப்படும்.
13. இந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க கணக்கு வைத்திருப்பவரால் செலுத்தப்பட வேண்டிய எந்தவொரு கட்டணத்தையும் மற்றும்/அல்லது வரியையும் நடப்பு மாதத்தில் அல்லது அடுத்த மாதத்தில் அல்லது கணக்கை மூடுவதற்கு முன்னர் வங்கி அறவிட்டுக் கொள்வதற்கு கணக்கு வைத்திருப்பவர் இணக்கப்பாட்டுடன் அதிகாரம் வழங்குகிறார்.
14. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மணி மார்கெட் சேமிப்புக் கணக்கை இடைநிறுத்துவதற்கு, வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு இரத்துச் செய்வதற்கு மற்றும்/அல்லது முடிவுறுத்திக் கொள்வதற்கு வங்கிக்கு அதிகாரம் உள்ளது என்பதுடன், அவ்வாறு செய்தால், அந்த கணக்குகள் வங்கியின் வழமையான சேமிப்புக் கணக்குகளாகக் கருதப்படும். வங்கியினால் ஒரு கணக்குத் திட்டம் வாபஸ் பெறப்பட்டால் அதன் பிற்பாடு கணக்கானது வங்கியினால்

பெயரிடப்படுகின்ற கணக்கு வகைக்கு மாற்றப்படுவதுடன் அவ்வாறான கணக்குகளைக் கட்டுப்படுத்துகின்ற நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அது உட்படும்.

15. வங்கியின் வழமையான வியாபார செயற்பாடுகளின் போது அறிவித்தல் கொடுத்துவிட்டு எந்த வேளையிலும் நேஷன்ஸ் மணி மார்கெட் சேமிப்புக் கணக்கை மூடுவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.
16. கணக்கின் தகவல்கள் உள்ளிட்ட அனைத்து தரவுகளையும் எந்தவொரு இடத்திற்கும் இடமாற்றுவதற்கு (transmit) மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்துவதற்கு அல்லது வைத்துக் கொள்வதற்கும் மற்றும் வங்கியில், அதன் தலைமையகத்தில், கிளை அலுவலகங்களில் அல்லது வழங்கப்படுகின்ற எந்தவொரு தரவுகள் தரப்படுத்தும் சேவையின் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஆட்கள் மற்றும் நிருவாகம் மற்றும் உள்ளக மேற்பார்வைத் தேவைகள் உள்ளிட்ட எந்தவொரு அலுவலுக்காகவும் மேற்படி இடமாற்றல் (transmit) மற்றும்/அல்லது களஞ்சியப்படுத்தல் அல்லது வைத்துக் கொள்ளல் அவசியம் எனக் கண்டால், கணக்குக் கூற்றுகளை அச்சிடல் மற்றும் தபாலிடல் அல்லது அதை ஒத்த சேவை வழங்குவதற்காக வங்கியுடன் தொடர்புள்ள ஆட்களுக்கு அந்தத் தரவுகளுக்குள் பிரவேசிக்க முடியும் என்பதை கணக்கு வைத்திருப்பவர் ஒப்புக்கொள்கிறார்.
17. இந்த நியதிகள், நிபந்தனைகள் மற்றும் மணி மார்கெட் சேமிப்புக் கணக்குகளின் நியதிகள், நிபந்தனைகள், வங்கிளின் ஏனைய நியதிகள், நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால் இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மேற்படி முரண்பாடுகள் நிலவுகின்ற விடயங்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாகும்.
18. இங்கு அடங்கியுள்ள நியதிகள், நிபந்தனைகளுக்கு மேலதிகமாக கணக்கு வைத்திருப்பவர் வங்கியின் வழமையான வியாபார நிபந்தனைகளில் (GBC) அடங்கியுள்ள நியதி, நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும். இந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருக்காத எந்தவொரு விடயத்துக்காகவும் கணக்கு வைத்திருப்பவர் வங்கியின் வழமையான வியாபார நிபந்தனைகளையே (GBC) நாடவேண்டியுள்ளார்.

19. இங்கு அடங்கியுள்ள அனைத்து நியதிகள், நிபந்தனைகள் இலங்கையின் சட்டத்தினால் கட்டுப்படுத்தப்படுவதுடன், கணக்கு வைத்திருப்பவர் இலங்கை நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கும் உட்பட வேண்டும்.

நேஷன்ஸ் மணி மார்கெட் சேமிப்புக் கணக்கைக் கட்டுப்படுத்துகின்ற மேற்படி நியதிகள், நிபந்தனைகள் மற்றும் வங்கியின் வழமையான வியாபார

நிபந்தனைகள் (GBC) ஆகியவற்றுடன் இந்தத் திட்டம் தொடர்பாக விபரங்கள் பற்றி இங்கு கையொப்பம் இடப்படுவதற்கு முன்னர் எனக்கு/எமக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதுடன், மேற்படி நியதிகளையும் நிபந்தனைகளையும் நான்/நாங்கள் வாசித்து, விளங்கி அவற்றுக்குக் கட்டுப்படுவதற்கு இத்தால் இணக்கம் தெரிவிக்கின்றேன்/றோம்.

……………………………………………

வாடிக்கையாளரின் கையொப்பம்

வாடிக்கையாளரின் பெயர்:

………………………………………………

வாடிக்கையாளரின் கையொப்பம்

வாடிக்கையாளரின் பெயர்: